# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 02.09.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 2038/F/2023**

திரு.கு.பாலதண்டபாணி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
திருப்பூர் மாவட்டம்-641605.

பொதுத்தகவல் அலுவலர் /
உதவி மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட்,
திருப்பூர் மண்டலம்,
திருப்பூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

**ஆணை-III**

இவ்வாணையம் 03.08.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.க.சி.கண்ணன், துணை மேலாளர் (கட்டிடம்), தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்., தலைமையகம், கோவை-641 043 அவர்கள் 02.09.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி மனுதாரர் திரு.கு.பாலதண்டபாணி அவர்கள் 6(1)ன் கீழ் 23.11.2022 அன்று மனு செய்ததை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் திருப்பூர் மண்டலத்திற்கு மனுமாற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்த மனு தங்களது திருப்பூர் மண்டலத் தபால் பிரிவின் ஆவண பதிவேட்டிலும், கோவை மண்டல தபால் பிரிவின் ஆவணப் பதிவேட்டிலும் கிடைக்கப்பெற்றதாக பதிவுகள் ஏதும் இல்லை எனவும் மேலும், அதற்கான ஒப்புதலும்

வழங்கப்படவில்லையெனவும் திருப்பூர் மற்றும் கோவை மண்டல தபால் பிரிவின் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்கள் எனவும் அதற்கான பதிவேடுகளின் நகல்களையும் இணைத்து தனது விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கிறது என்பதை பதிவு செய்து கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுக் கோரும் 30.07.2022 நாளிட்ட புகார் மனுவின் மீது மேற்கொண்ட நடவடிக்கையின் விவரம் குறித்த தகவலை உரிய பொது அதிகார அமைப்பிடமிருந்து பெற்று பொதுத்தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து 16.09.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2038/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
திருப்பூர் மாவட்டம்-641605.

பொதுத்தகவல் அலுவலர் /
உதவி மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட்,
திருப்பூர் மண்டலம்,
திருப்பூர் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.கு.பாலதண்டபாணி,
எண்.180/215, காந்திபுரம்,
தாராபுரம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்-638656.

**<u>நகல்</u>**
**மாவட்ட ஆட்சியர்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**திருப்பூர் மாவட்டம்.**

Copy to file: KR/PA